நகராட்சி நிர்வாகம்,
திருச்செந்தூர்- 628215
நாள்: 18.08.2022

சாதாரணக்கூட்டம்

அன்புடையீர் வணக்கம்,

திருச்செந்தூர் நகராட்சியின் சாதாரணக்கூட்டம் 22.08.2022 தேதி திங்கள் கிழமை, காலை 11.00 மணிக்கு நகர் மன்ற கூட்ட அரங்கில் வைத்து தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற உள்ளது. அதுசமயம் கீழ்கண்ட பொருள்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

தலைவர்
திருச்செந்தூர் நகராட்சி

பொருள் எண். 01

திருச்செந்தூர் நகராட்சியில் 15th CFC 2021-22ன் கீழ் வார்டு எண். 1 பேருந்துநிலையம் அருகில் அமைந்துள்ள பூங்காவினை மேம்பாடு செய்தல் பணிக்கு ரூ.18.98 லட்சம் மதிப்பீட்டில் திரு. ரஞ்சித்குமார் ஒப்பந்ததாரரிடம் பணி ஆணை வழங்கப்பட்டது. மேற்படி பணி மேற்கொள்ளவுள்ள இடமானது எரிதகனமேடை அருகில் உள்ளதால், குழந்தைகள் மற்றும் பெண்கள் செல்ல ஏற்றதாக இல்லை. எனவே மேற்படி பணியினை ஆலந்தலை சுனாமிநகர் பகுதியில் அமைக்க மன்றத்தின் பார்வைக்கு மற்றும் அனுமதிக்கு.

ஆணையாளர் குறிப்பு

மேற்படி பணியினை ஆலந்தலை சுனாமிநகர் பகுதியில் அமைக்க மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண்: 112

தீர்மானிக்கப்பட்டது.

பொருள் எண். 02

சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண். 20860/2022/SBM, நாள். 25.07.2022 ன் படி தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் நகராட்சியில் ரூ. 57.50 லட்சத்திற்கு இரண்டு நுண் உரம் மையம் (MCC) 5 டன் கொள்ளவில் அமைக்க கருத்துரு அனுமதிக்கப்பட்டுள்ளது.

வ. எண்.	பணிகள் விபரம்	நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் பரிந்துரை செய்த தொகை (ரூ. இலட்சத்தில்)	அனுமதி வழங்கப்படும் தொகை (ரூ. இலட்சத்தில்)		
			மத்திய அரசு பங்கு	மாநில பங்கு	நகராட்சி பங்கு
1.	திருச்செந்தூர் நகராட்சி, ஆலந்தலை வளமீட்பு பூங்காவில் 3 டன் நுண் உரம் மையம் கட்டுதல். **ரூ.34.50 லட்சம்**	57.50	28.75	18.98	9.78
2.	திருச்செந்தூர் நகராட்சி, மாட்டுத்தாவணி அருகில் 2 டன் நுண் உரம் மையம் கட்டுதல். **ரூ.23.00 லட்சம்**				

மேற்படி பணி மேற்கொள்ளவுள்ளது மன்றத்தின் பார்வைக்கு.

தீர்மானம் எண்: 113

தீர்மானிக்கப்பட்டது.

பொருள் எண். 03

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் நகராட்சியில் உள்ள அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோவிலானது, திருப்பதிபோல தரம் உயர்த்தப்பட உள்ளதால், அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோவில் அலுவலகத்திலிருந்து, நகராட்சிக்கு சொந்தமான விருந்தினர் இல்லம் (சர்வே எண். 202/1) அமைந்துள்ள இடத்தினை நில மாற்றம் செய்ய கோரியுள்ளார்கள். தற்போது அவ்விடத்தில் நகராட்சி பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யும் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள், தரைமட்ட நீர்த்தேக்க தொட்டிகள், மின் மோட்டார் அறை மற்றும் விருந்தினர் இல்லம் போன்றவைகள் அமைந்துள்ளன. எனவே கோவில் நிர்வாகத்தால் கோரப்பட்டவாறு, மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள், தரைமட்ட நீர்த்தேக்க தொட்டிகள், மின் மோட்டார் அறை அமைந்துள்ள இடம் தவிர மீதமுள்ள 18 3/4 Cent - ல் அமைந்துள்ள விருந்தினர் இல்லம் இடத்தை கோவில் நிர்வாகத்திற்கு நில மாற்றம் செய்யவும், மேலும், கோவில் நிர்வாகத்திற்கு சொந்தமான சபாபதிபுரம் சாலையில் அமைந்துள்ள இடத்தில் நகராட்சிக்கு

விருந்தினர் மாளிகை அமைக்க அதே அளவிலான இடத்தை (18 3/4 Cent) நகராட்சிக்கு நில மாற்றம் செய்து தரவும், மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

ஆணையாளர் குறிப்பு

18 3/4 Cent – ல் அமைந்துள்ள விருந்தினர் இல்லம் இடத்தை கோவில் நிர்வாகத்திற்கு நில மாற்றம் செய்யவும், மேலும், கோவில் நிர்வாகத்திற்கு சொந்தமான சபாபதிபுரம் சாலையில் அமைந்துள்ள இடத்தில் நகராட்சிக்கு விருந்தினர் மாளிகை அமைக்க நகராட்சிக்கு மாற்றம் செய்து தரவும் மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண்: 114

தீர்மானிக்கப்பட்டது.

பொருள் எண். 04

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் நகராட்சியின் மொத்த மக்கள் தொகை 32171 ஆகும் தற்போதைய நிலவரப்படி 35171 ஆகும். மேலும், இந்நகரில் அமைந்துள்ள அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோவிலுக்கு வெளியூரிலிருந்து நாள்தோறும் 7000 மக்கள் வந்து செல்கின்றார்கள். பண்டிகை நாட்களில் லட்சக்கணக்கான பக்தர்கள் வந்து செல்கின்றனர். எனவே, இந்கராட்சியில் சிறப்பம்சமாக, குடிநீர், தூய்மை பணி மற்றும் தெரு விளக்கு வசதிகள் செய்து தருவது மிக மிக அவசியமானதாகும். எனவே, இதற்கு முன்னர் புதிதாக நகர்மன்றம் அமைந்த காரணத்தால் மேற்படி பணிக்களுக்கான பொருட்களை அவசர அவசியம் கருதி விலைப்புள்ளி பெற்று, குறைந்த விலைப்புள்ளி (2021-2022ம் ஆண்டிற்கான வருடாந்திர ஒப்பந்தப்புள்ளி விலையிலேயே) குறிப்பிட்ட ஸ்ரீ அங்காளம்மள் டிரோஸ்யிடம் பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டது. அதற்கான செலவு தொகை தெருவிளக்கு சாமானங்கள் மொத்தம் ரூ. 40,72,305/-, (தீர்மான எண். 105 நாள். 26.07.2022) குடிநீர் சாமானங்கள் மொத்தம் ரூ. 11,87,583/- (தீர்மான எண். 104 நாள். 26.07.2022) மற்றும் பொதுசுகாதரம் சாமனங்கள் மொத்தம் ரூ. 5,69,029/- (தீர்மான எண். 103 நாள். 26.07.2022) நகர்மன்ற அனுமதியுடன் வழங்கப்பட்டது.

மேலும் திருச்செந்தூர் தற்போது நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ள நிலையிலும், வரலாற்று சிறப்பு மிக்க நகராட்சியாக திகழ்வதாலும், நாள்தோறும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் மற்றும் நகராட்சி பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு, குடிநீர் உதிரி சாமான்கள் மற்றும் தெரு விளக்கு சாமான்கள் கொள்முதல் செய்ய வேண்டியது அவசியமாக கருதப்படுவதால், அதனை வருடாந்திர ஒப்பந்தப்புள்ளி பெற்று கொள்முதல் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு.

தீர்மானம் எண்: 115

தீர்மானிக்கப்பட்டது.

பொருள் எண். 05

திருச்செந்தூர் நகராட்சி பகுதியில் அமைந்துள்ள கழிவு நீர் கால்வாய்களில் அடிக்கடி கழிவு நீர் வெளியேறுவதால் பொதுமக்களுக்கு சுகாதார கேடு ஏற்படுகிறது. மேலும், நகராட்சி

சாலைகளில் ஆங்காங்கே குழிகள் ஏற்பட்டு பொதுமக்களுக்கு இடைஞ்சலாக உள்ளது. எனவே மேற்படி கழிவு நீர் கால்வாய்களை சுத்தம் செய்து மூடி அமைத்து சுகாதாரத்தை பேணி காத்திடவும், சாலைகளை சீர் செய்து பொதுமக்களுக்கு விபத்து ஏற்படாமல் தடுத்திடவும், விலைப்புள்ளி பெற்று மேற்படி பணிகளை செய்திட மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்

ஆணையாளர் குறிப்பு :

பொதுமக்கள் மற்றும் பொதுசுகாதாரத்தின் நலன் கருதி, மேற்படி பணியினை விலைப்புள்ளி பெற்று மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண்: 116

தீர்மானிக்கப்பட்டது.

பொருள் எண். 06

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, திருச்செந்தூர் நகராட்சிக்குட்பட்ட மாட்டுதாவனி பகுதியில், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்களால் சட்டப்பேரவையில் அறிவிக்கப்பட்ட. புதிய தினசரி சந்தை கட்டிடம், புதிய நகராட்சி அலுவலகம் மற்றும் புதிய அறிவுசார் மையம் போன்ற வளர்ச்சி திட்டப்பணிகள் துவங்க உள்ளது. எனவே தற்போது மாட்டுதாவணியில் இயங்கிவரும் தினசரிசந்தை, தற்காலிகமாக நகராட்சிக்கு சொந்தமான எரிதகனமேடை அமைந்துள்ள பகுதிக்கு மாற்றம் செய்ய வேண்டியுள்ளது. எனவே மேற்படி இடத்தில் புதியதாக மின்விளக்கு அமைக்க ரூ. 314918/- தொகை தமிழ்நாடு மின்சாரவாரியத்திற்கு வழங்க மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

தீர்மானம் எண்: 117

தீர்மானிக்கப்பட்டது.

பொருள் எண். 07

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் நகராட்சி, நகர்மன்றத் தலைவர் அவர்களது Scorpio வாகனத்திற்கு ஆயுட்கால சாலை வரியாக ரூ. 288983/- வட்டாரபோக்குவரத்து அலுலவகத்திற்கு வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.

தீர்மானம் எண்: 118

தீர்மானிக்கப்பட்டது.

பொருள் எண். 08

திருச்செந்தூர் நகராட்சியில் **பொது நிதி 2022 – 2023ன்** கீழ், கீழ்கண்ட பணிகள் செய்ய வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி ஒப்பு நோக்கு பட்டியல்கள் முன் அனுமதி பெறப்பட்டது, மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

வ.எண்.	பணி விபரம்	மதிப்பீடு (லட்சத்தில்)	தேஜா ஸ்டாக் ஒப்பந்தகாரர் திருச்செந்தூர்	திரு. சக்திவேல், ஒப்பந்தகாரர், உடன்குடி
1.	சுப்பிரமணியபுரம் மேல்நிலை நீர்தேக்க தொட்டிக்கு குடிநீர் பம்பிங் மெயின் குழாய் அமைத்தல்.	0.40	9.26% உயர்வு	0.95% குறைவு
2.	அன்பு நகர் பகுதி மேல்நிலை நீர்தேக்க தொட்டியிலிருந்து பகிர்மான குழாய் அமைத்தல்.	3.00	1.72% உயர்வு	0.10% குறைவு

அலுவலக குறிப்பு

குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. சக்திவேல், ஒப்பந்தகாரர், உடன்குடி என்பவரின் ஒப்பந்தபுள்ளியை அங்கீகரிக்கலாம்.

தீர்மானம் எண்: 119

தீர்மானிக்கப்பட்டது.

பொருள் எண். 09

திருச்செந்தூர் பேரூராட்சி அரசாணை (நிலை) எண். 116 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்: 07.12.2021-ல் நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. திருச்செந்தூர் நகராட்சி பகுதிகளுக்கு குரங்கனி குடிநீர் திட்டம், எல்லப்பன் நாயக்கன் குளம் மற்றும் கானம் தனி குடிநீர் திட்டத்தின் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி குரங்கனி நீரேற்று நிலையத்தில் மின் தடை ஏற்படும்போது நகராட்சி பகுதி மக்களுக்கு குடிநீர் வழங்குவதில் தாமதம் ஏற்படுகிறது. குறிப்பாக மழைக்காலங்களில் அடிக்கடி மின் தடை ஏற்படுகிறது. எனவே இதனை தடுக்கவும், நகராட்சி மக்களுக்கு குடிநீர் சீராக வழங்கவும், குரங்கனி நீரேற்று நிலையத்திற்கு விலைப்புள்ளி பெற்று புதியதாக 200 KV ஜெனரேட்டர் பொருத்த மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

ஆணையாளர் குறிப்பு :-

நகராட்சி மக்களுக்கு குடிநீர் சீராக வழங்க, குரங்கனி நீரேற்று நிலையத்திற்கு விலைப்புள்ளி பெற்று புதியதாக 200 KV ஜெனரேட்டர் அமைக்க மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண்: 120

தீர்மானிக்கப்பட்டது.

பொருள் எண். 10

திருச்செந்தூர் நகராட்சி பகுதியில் ஏற்படுகின்ற குடிநீர் குழாய் உடைப்பினை சரி செய்யவும், பொது சுகாதாரம் மற்றும் பொதுமக்களின் நலன் கருதி சாலையோரமாக உள்ள முட்செடிகள் மற்றும் குப்பைகளை அகற்றவும், நகராட்சி சாலையில் ஏற்படுகின்ற குழிகளை சரி செய்திடவும், கடல் முகத்துவாரத்தில் ஏற்படும் அடைப்பினை சரி செய்திடவும், மறுகால் ஓடையில் சேரும் குப்பைகளை அகற்றுவதற்கும் ஜேசிபி வாகனம் பயன்படுத்துவது மிக அவசியமான ஒன்றாக அமைகிறது. எனவே மேற்படி பணிகளை ஜேசிபி மூலம் மேற்கொள்ள, ஜேசிபி வாகனம் பயன்படுத்த (கூலி மற்றும் டீசல் உட்பட) வருடாந்திர ஒப்பந்தப்புள்ளி கோர மன்றத்தின் அனுமதிக்கு .

தீர்மானம் எண்: 121

தீர்மானிக்கப்பட்டது.

பொருள் எண். 11

திருச்செந்தூர் நகராட்சி 9 வது வார்டு உறுப்பினர் திரு. S. கண்ணன், மேலரதவீதியில் இரண்டு இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி அமைக்க வேண்டி, அளித்துள்ள விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

தீர்மானம் எண்: 122

தீர்மானிக்கப்பட்டது.

பொருள் எண். 12

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் நகராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2021-2022 கீழ் கீழ்கண்ட பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

வ. எண்.	பணிகள் விபரம்	சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் பரிந்துரை செய்த தொகை (ரூ. இலட்சத்தில்)	நிர்வாக அனுமதி வழங்கப்படும் தொகை (ரூ. இலட்சத்தில்)		
			சட்டமன்ற உறுப்பினர் நிதி	ஊராட்சி பொதுநிதி	மொத்தம்
1.	திருச்செந்தூர் நகராட்சி, வார்டு 23 தோப்பூர் புதுக்காலனி (மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி) பின்புறம் புதிய நியாயவிலைக் கட்டிடம் கட்டுதல்.	13.25	13.25	2.25	15.50

மேற்படி திட்டத்தின் கீழ் பணி மேற்கொள்ளவுள்ளது மன்றத்தின் பார்வைக்கு.

தீர்மானம் எண்: 123

தீர்மானிக்கப்பட்டது.

பொருள் எண். 13

சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண். 20789/2021/UPA1, நாள். 16.06.2022 ன் படி தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் நகராட்சி திருச்செந்தூர் நகராட்சி பகுதியில் உள்ள அனைத்து சாலையோர வியாபாரிகளை பயோமெட்ரிக் முறையில் கணக்கெடுப்பு எடுத்தல் மற்றும் அவர்களுக்கு QR Code உடனான அடையான அட்டை தயாரித்து வழங்குதல் தொடர்பாக ஒப்பந்தப்புள்ளி 15.07.2022 அன்று கோரப்பட்டு, கீழக்கண்ட இரண்டு நிறுவனத்திடம் ஒப்பந்தப்புள்ளி பெற்றப்பட்டு, தகுதிபெற்ற நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்க மன்றத்தில் முன் அனுமதி பெறப்பட்டது, தற்போது மன்றத்தின் பார்வைக்கு.

வ. எண்.	பணிகள் விபரம்	ஒப்பந்தப்புள்ளி பெற்றப்பட்டு இரண்டு நிறுவனத்தில் பெயர்	
1.	திருச்செந்தூர் நகராட்சி பகுதியில் உள்ள அனைத்து சாலையோர வியாபாரிகளை பயோமெட்ரிக் முறையில் கணக்கெடுப்பு எடுத்தல் மற்றும் அவர்களுக்கு QR Code உடனான அடையாள அட்டை (ID Card) தயாரித்தது வழங்குதல், விற்பனை சான்றிதழ், (Certificate of Vendors) நகர தெரு விற்பனை திட்டம் (CSVP) விரிவான செயல்படுத்துதல் திட்டம் (DIP) மற்றும் MIS தரவுகளை 5 ஆண்டுகளுக்கு பராமரித்தல்	Mirifical carees Pvt Ltd (குறைவு)	Bharathi HR Consultancy (கூடுதல்)

மேற்படி தகுதிபெற்ற Mirifical carees Pvt Ltd நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்க மன்றத்தின் பார்வைக்கு.

தீர்மானம் எண்: 124

தீர்மானிக்கப்பட்டது.

பொருள் எண்.14

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் நகராட்சிக்குட்பட்ட குடியிருப்புகளில் சொத்துவரி தீர்வை எண், குடிநீர் இணைப்பு எண் மற்றும் புதைவடிகால் இணைப்பு எண்களை வீடுகளின் முன் பக்கம் பெயிண்டு அடித்து எண்கள் எழுதுவதற்கு பெறப்பட்ட விலைப்புள்ளி ஒப்பு நோக்கு பட்டியல்கள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

வ.எண்	விவரம்	முருகா பெயிண்ட் ஒர்க்ஸ்	பாலா ஆர்ட்ஸ்	மகா ஆர்ட்ஸ் அண்ட் ஏஜென்சி
1.	வட்டம் ஒன்றிற்கு	35	39	48
2.	எழுத்து ஒன்றிற்கு	8	12	10

அலுவலக குறிப்பு

குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள முருகா பெயிண்ட் ஒர்க்ஸ் என்பவரின் விலைப்புள்ளியை அங்கீகரிக்கலாம்.

தீர்மானம் எண்: 125

தீர்மானிக்கப்பட்டது.

பொருள் எண்.15

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் நகராட்சிக்குட்பட்ட ஆலந்தலை சுனாமிநகர் பகுதியில் உள்ள வீடுகளுக்கு மழைக்காலங்களில் மழைநீர் வீடுகளுக்கு உட்புறம் வந்து மக்களுக்கு பெரும்பாதிப்பை ஏற்படுத்துகிறது. எனவே இதனை தடுக்கும் வகையில் ஏற்கனவே உள்ள சுவரை உயர்த்தி மழைநீர் தங்கும் பகுதிகளில், மழை நீர் தேங்காதவாறு மணல் நிரப்பி அவ்விடத்தை உயர்த்தும் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

தீர்மானம் எண்: 126

தீர்மானிக்கப்பட்டது.

பொருள் எண்.16

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் நகராட்சிக்கு சொந்தமான, காலியாக உள்ள பேருந்துநிலைய வணிகவளாக கடை எண். 16, வணிக வளாக முதல் தளம் கடை எண். 6, 8, 9, 10, 15 மற்றும் படிகட்டு அறை எண். 02 ஏலம் விடுவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு.

தீர்மானம் எண்: 127

தீர்மானிக்கப்பட்டது.

பொருள் எண்.17

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் நகராட்சிக்குட்பட்ட சபாபதிபுரம் தெரு (அம்மன் ஸ்டோர்) அருகில் மழைக்காலங்களில் மழைநீர் பெருமளவில் தேங்கி பொதுமக்களுக்கு

இடையூறு அளிக்கும் வகையில் உள்ளது. இதனை தடுக்கும் பொருட்டு சபாபதிபுரம் தெருவிலிருந்து, பால்பண்ணை தெரு வழியாக எடிசன் மருத்துவமனை மழைநீர் வடிகாலில் சேரும் வகையில் புதியதாக வாறுகால் காண் அமைக்க மன்றத்தின் அனுமதிக்கு.

தீர்மானம் எண்: 128

தீர்மானிக்கப்பட்டது.

பொருள் எண்.18

திருச்செந்தூர் நகராட்சி, TNUDF சொந்த நிதி (Loan) திட்டம் 2020-21ன் கீழ் முத்தாரம்மன் கோவில் தெரு முதல் தோப்பூர் வரை பேவர் பிளாக் சாலைகள் அமைத்தல் பணிக்கு பணி உத்திரவு வழங்கப்பட்ட திரு. வித்யாசாகர் என்பவருக்கு அதற்கான இறுதி பட்டியல் தொகை ரூ. 25,97,695/- காசோலையாக வழங்கிட மன்றத்தின் பார்வைக்கு.

தீர்மானம் எண்: 129

தீர்மானிக்கப்பட்டது.

பொருள் எண்.19

திருச்செந்தூர் நகராட்சி, உடன்குடி பவர்பிளாண்ட் CSR திட்டம் 2018-19ன் கீழ் தரைமட்ட நீர்த்தேக்க தொட்டி ஆலந்தலையில் கட்டப்பட்ட பணிக்கு, திரு. ரஞ்சித்குமார் என்பவருக்கு அதற்கான இறுதி பட்டியல் தொகை ரூ. 4,94,810/- காசோலையாக வழங்கிட மன்றத்தின் பார்வைக்கு.

தீர்மானம் எண்: 130

தீர்மானிக்கப்பட்டது.

பொருள் எண்.20

அரசாணை(நிலை) எண். 116, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.07.12.2021ன் படி தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் சிறப்பு நிலை பேரூராட்சி, நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு, 07.12.2021 முதல் நகராட்சியாக செயல்பட்டு வருகிறது. எனவே திருச்செந்தூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள தெரு முனைகளில் தெருக்களின் பெயர் பலகை (SS) வைக்கும் பணி மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும்.

தீர்மானம் எண்: 131

தீர்மானிக்கப்பட்டது.

பொருள் எண்.21

திருச்செந்தூர் நகராட்சியில் திட்டப்பணிகள் பல செயல்படுத்தப்பட்டு வருகிறது. பணியினை சிறப்பாக செய்திடவும், அதற்குரிய கோப்புகள் மற்றும் ஆவணங்களை பாதுகாப்பாக வைத்திடவும் நகராட்சி பொறியாளர் பிரிவுக்கு தனியாக அறை தேவைப்படுகிறது. எனவே நகராட்சி அலுவலகத்தில் பழுதடைந்துள்ள அறையினை பழுது பார்க்கும் பணி மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

தீர்மானம் எண்: 132

தீர்மானிக்கப்பட்டது.

பொருள் எண். 22

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் நகராட்சியில் ஆவணி திருவிழா நடைபெற்று வருகிறது. திருவிழாவிற்கு வருகை தரும் பக்தர்கள் மற்றும் பொதுமக்களுக்கு குடிநீர் வசதி (தண்ணீர் பந்தல்) மற்றும் மருத்துவ வசதி செய்து கொடுக்க மன்றத்தின் அனுமதிக்கு.

தீர்மானம் எண்: 133

தீர்மானிக்கப்பட்டது.

பொருள் எண். 23

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் நகராட்சியில், கலைஞர் நகர்புற மேம்பாட்டுத் திட்டம் 2022-23 ன் கீழ், கீழ்கண்ட பணி மேற்கொள்ள வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள், ஒப்பு நோக்கு பட்டியல்கள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

வ.எண்.	பணி விபரம்	மதிப்பீடு (லட்சத்தில்)	திரு. ஆர். தங்கபாண்டி ஒப்பந்தகாரர் ஆறுமுகநேரி	திருமதி. T. ஜானகியம்மாள், ஒப்பந்தகாரர், ஆறுமுகநேரி
1.	அறிவுசார்மையம் கட்டும் பணி Knowledge Centre	230.00	மதிப்பீடு விலையினை விட 2.23% குறைவு	மதிப்பீடு விலையினை விட 2.30% கூடுதல்

அலுவலக குறிப்பு

குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. ஆர். தங்கபாண்டி, ஒப்பந்தகாரர், ஆறுமுகநேரி என்பவரின் ஒப்பந்தபுள்ளியை அங்கீகரிக்கலாம்.

தீர்மானம் எண்: 134

தீர்மானிக்கப்பட்டது.

பொருள் எண். 24

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் நகராட்சியில், தமிழ்நாடு சட்டமன்ற அறிவிப்புகள் 2022-23 ன் கீழ், கீழ்கண்ட பணி மேற்கொள்ள வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள், ஒப்பு நோக்கு பட்டியல்கள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

வ.எண்.	பணி விபரம்	மதிப்பீடு (லட்சத்தில்)	திரு. ஆர். தங்கபாண்டி ஒப்பந்தகாரர்	திருமதி. T. ஜானகியம்மாள், ஒப்பந்தகாரர்,

			ஆறுமுகநேரி	ஆறுமுகநேரி
1.	திருச்செந்தூர் நகராட்சி புதிய அலுவலக கட்டிடம்	350.00	மதிப்பீடு விலை	மதிப்பீடு விலையை விட 9.11% கூடுதல்

அலுவலக குறிப்பு

குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. ஆர். தங்கபாண்டி, ஒப்பந்தகாரர், ஆறுமுகநேரி என்பவரின் ஒப்பந்தபுள்ளியை அங்கீகரிக்கலாம்.

தீர்மானம் எண்: 135

தீர்மானிக்கப்பட்டது.

பொருள் எண். 25

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் நகராட்சிக்கு குடிநீர் பகிர்மான குழாய் வேலைகள், மோட்டார் மற்றும் எலக்ட்ரிக்கல் வேலைகள் பார்த்தல் மற்றும் புதிய உதிரி சாமான்கள் விநியோகம் செய்ய புதிய ஒப்பந்ததாரராக பதிவு செய்ய திரு. மரிய அந்தோணி ஜூட் ராஜா, ஆர்.எஸ். எண்டர்பிரைசஸ், துத்துக்குடி என்பவரது சொத்து மதிப்பு மற்றும் GST சான்றுடன் விண்ணப்பம் செய்துள்ளார். மேற்படி நபரினை நகராட்சியில் புதிய ஒப்பந்ததாரராக பதிவு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு.

தீர்மானம் எண்: 136

தீர்மானிக்கப்பட்டது.

பொருள் எண். 26

தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் நகராட்சி பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யும் குடிநீர் பகிர்மான (PVC) குழாய் சாலையின் அடிபுறம் உள்ளதால், அடிக்கடி அடைப்பு ஏற்படுகிறது. மேலும் முறையற்ற இணைப்புகளும் (முறையற்ற இணைப்புகளும் (Illegal Connection) மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதனை தடுக்கும் விதமாக, சோதணை ஓட்டமாக குடிநீர் பகிர்மான குழாய் GI குழாயாக நகராட்சி பகுதிகளில் சாலையின் மேற்புறமாக அமைக்கும் பணி படிப்படியாக மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

தீர்மானம் எண்: 137

தீர்மானிக்கப்பட்டது.

பொருள் எண். 27

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் நகராட்சி நகர்மன்றத்தின் 16.05.2022ம் தேதிய மன்றத் தீர்மான எண். 57ல், 15வது நிதிக்குழு மானிய திட்டம் 2020-21ன் கீழ் புதியதாக 20 எண்ணம் பேட்டரி வாகனம் வாங்க தீர்மானம் பெறப்பட்டது. திருச்செந்தூர் நகராட்சியில் 2011ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கீட்டின் படி மக்கள் தொகை 32171, தற்போது 35171, குடியிருப்பு 10557 மற்றும் வணிகம் 3310 ஆகும். மேலும் கோவில் நகரமான திருச்செந்தூர் நகராட்சிக்கு நாள்தோறும் சுமார் 7,000 பக்தர்கள் மற்றும் யாத்ரீகர்கள் வந்து செல்கின்றனர். எனவே பொதுமக்கள் மற்றும்

பக்தர்களின் பொதுசுகாதார நலன் கருதி 20 எண்ணம் பேட்டரி வாகனத்திற்கு பதிலாக கீழ்கண்ட வாகனங்கள் மேற்படி திட்டத்தின் கீழ் தேர்வு செய்ய மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

வ.எண்.	பணி விபரம்	மதிப்பீடு (இலட்சத்தில்)
1.	புதியதாக 4 எண்ணம் பேட்டரி வாகனம் வாங்குதல்.	10.00
2.	புதியதாக 1 எண்ணம் டிராகடர் வாகனம் வாங்குதல்.	15.00
3.	புதியதாக 4 எண்ணம் இலகுரக வாகனம் வாங்குதல்.	25.00

தீர்மானம் எண்: 138

தீர்மானிக்கப்பட்டது.

(ஓம்) திருமதி. ர.சிவஆனந்தி,

தலைவர்

திருச்செந்தூர் நகர் மன்றம்

/உண்மை நகல்/

ஆணையாளர்

திருச்செந்தூர் நகராட்சி